பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 26 செவ்வாய்க்கிழமை (10.07.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 223

## மோதல்களை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில்

# பௌத்தபீட உயர்மட்டக் குழு விரைவில் வன்னி செல்லும்

## தெற்கின் கிறிஸ்தவ மதத் தலைவர்களுடன்

கொழும்பு,ஜூலை10

வடக்கிலும் கிழக்கிலும் நடைபெறும் மோதல்களை முடிவுக்குக் கொண்டுவருதல் - தடைப்பட்டுள்ள சமாதான முன்னெடுப்புக்களை மீள ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்தல் இவை இரண்டு விடயங்கள் குறித்தும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்காக மூன்று பிரதான பௌத்த பீடங்களின் பிரதிநிதிகள் விரைவில் வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

அவர்களுடன் தெற்கின் கிறிஸ்தவ மதத் தலைவர்களும் செல்வர். (08ஆம் பக்கம் பார்க்க)

## நூறு சி.டி.எம்.ஏ. தொலைபேசி நாளாந்தம் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 10

குடாநாட்டில் இன்று முதல் நாளாந்தம் நூறு பேருக்கு ''சிற்றிலிங் சி.டி.எம்.ஏ.'' தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட உள்ளன.

ரெலிக்கொம் நிறுவனத்தின் வட மாகாண பிரதிப் பொது முகாமையாளர் வி. யோகேந்திரன் இத்தகவலை தெரிவித்தார்.

கடந்த இரண்டாம் திகதி முதல் 'சி.டி.எம்.ஏ' தொலை பேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆஸ்பத்திரிகள், தபால் நிலையங்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கென இதுவரை25 இணைப்புக்கள் வழங்கப்பட்டன.

அரச அதிபரினால் சிபார்சு செய்யப்பட்டவர்களில் அனுமதிக்கப்பட்டவர்களின் பெயர்பட்டியல் கிடைத்துள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## பலத்த சவால்களுக்கு மத்தியில் போர் நிறுத்த ஒப்பந்தம்.....

### கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜெனரல் சொல்பேர்க்



கொழும்பு,ஜூலை 10

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்பாடு பலத்த சவால்களுக்கு முகம்கொடுத்து வருகின்றது.

எங்களது பிரசன்னம் தேவைதானா என்று எங்களையே நாங்கள் திரும்பத் திரும்ப கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

இரு தரப்புக்களும் உடன்பாட்டை மதித்து நடப்பதன் அவசியத்தை உணர்ந்து செயற்படவேண்டும்.

இதற்கான தீர்ப்பை இலங்கை மக்களிடமே விட்டு விடுகின்றோம்.

- இப்படிக் கருத்து வெளியிட்டுள்ளார் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் லார்ஸ் ஜொகான் சொல்பேர்க்.

கொழும்பில் உள்ள வெளிநாட்டு பத்திரிகையாளர்களுடன் நடத்திய பிரத்தியேக சந்திப்பு ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

போர் நிறுத்த உடன்படிக்கை பலத்த சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றது. இதனைக் கண்காணிக்க எமது உறுப்பினர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க உத்தேசித்துள்ளோம். தற்போது 30 கண்காணிப்பாளர்களே பணிபுரிகின்றனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## தொப்பிகலவின் 'தோரா போராவை' படைகள் நேற்றுக் கைப்பற்றியதாகத் தகவல்

கொழும்பு, ஜூலை 10

இலங்கை கொமாண்டோக்கள், தொப்பிகல வனாந்தரப் பகுதியில், பரந்த கற்பாறைப் பீடமொன்றைக் கண்டுபிடித்துள்ளார்கள் என நேற்றுத் திங்கட்கிழமை இராணுவம் கூறியதாக, ஏ.பி.செய்திச் சேவை தெரிவித்தது.

கொமாண்டோக்கள் பாரிய கற்பாறைப் பீடத்தைக் கண்டுபிடித்துள்ளார்கள். இதற்கு அவர்களால் 'தோரா போரா'' என புனைபெயர் சூட்டப்பட்டுள்ளது. அதனை அடுத்து புதிய கொமாண்டோக்கள் அப்பகுதியில் தேடுதல் வேட்டையைத் தீவிரப்படுத்தினார்கள் என இராணுவம் தெரிவித்தது.

புல்வெளிகளிலும் புதர்களுக்குள்ளும் 200 புலித் தீவிரவாதிகள் வரை பதுங்கியிருக்கலாம் என்ற நோக்கில், இத்திடீர் வேட்டை மேற்கொள்ளப்பட்டது. இம்மாத இறுதிக்குள், கிழக்கிலங்கை அரச கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடலாமென்பதை இராணுவ நடவடிக்கைகள் உணர்த்துகின்றன என்று இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இம்மாத இறுதிக்குள் கிழக்கு, அரசின்

(08ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்கள், முஸ்லிம்களையும் ஒன்று திரட்டி ஆட்சியைக் கைப்பற்ற ஜே.வி.பியினர் திட்டம்

### கட்சியின் முக்கியஸ்தர் அனுரகுமார திஸநாயக்கா செவ்வி

கொழும்பு,ஜூலை 10

தமிழர்கள், முஸ்லிம்கள் உள்ளிட்ட மூவின மக்களையும் ஒன்றுதிரட்டி, தற்போதைய அரசைக் கவிழ்த்து, ஆட்சியைக் கைப்பற்ற தீர்மானம் எடுத்துள்ளது ஜே.வி.பி.

ஜே.வி.பியை தமிழர் மற்றும் முஸ்லிம்களுக்கு விரோதமான இனவாதக் கட்சியாகப் பொய்யாகச் சோடித்தவர்கள் தடம் தெரியாமல் மறையும் காலம் வந்துவிட்டது என்றும் அக்கட்சி தெரிவித்திருக்கின்றது.

ஜே.வி.பியின் முக்கியஸ்தரும் எம்.பியுமான அனுரகுமார திஸநாயக்கா நேற்று உதயனுக்கு அளித்த விசேட செவ்வியில் இவ்விடயங்களைத் தெரிவித்திருக்கின்றார்.

அந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் - முஸ்லிம் உள்ளிட்ட மூவின மக்களையும் ஒன்று திரட்டி அரசைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றத் தீர்மானம் எடுத்துள்ளது ஜே.வி.பி.



நாட்டை மாறிமாறி ஆட்சி செய்த ஐக்கிய தேசிய கட்சி , ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவை புரிந்த ஊழலைப் புரியாமல் - அக்கட்சிகள் நிலை நிறுத்திய இனவாதத்தை உருவாக்காமல் - மூவின மக்களையும் ஒன்றிணைத்த சிறந்த ஆட்சியை ஸ்தாபிக்க (07ஆம் பக்கம் பார்க்க)

## பாப்பரசரின் பிரதிநிதி இலங்கை வருவார்

கொழும்பு,ஜூலை 10

புனித பாப்பரசர் 16 ஆவது பெனடிக்றின் விசேட பிரதிநிதி ஒருவர் விரைவில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள இருக்கிறார்.

இலங்கையில் அதிகரித்துள்ளமோதல்கள்,

(08ஆம் பக்கம் பார்க்க)

## சட்டத்துக்கு மாறாக நடந்ததில்லை; பிறர் வற்புறுத்தலையும் ஏற்றதில்லை

### பிரதம நீதியரசர் சொல்கிறார்



கொழும்பு,ஜூலை 10

சட்டத்துக்குப் புறம்பாக நான் எந்த ஒரு பணிப்புரையையோ தீர்ப்பையோ வழங்கியது கிடையாது. அவ் வாறு செய்யும்படி மற்றவர்கள் கேட்ட சந்தர்ப்பங்களிலும் அவைகளை நிராகரித்தும் உள்ளேன்.

இவ்வாறு தெரிவித்தார் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா.

மல்வானையில் அல் முபாரக் கல்லூரியில் நடந்த வைபவம் ஒன்றில் பிரதம நீதியரசர் உரைநிகழ்த்தினார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது -

பிரதம நீதியரசரின் கடமை, நாட்டின் சட்டரீதியிலான ஒழுங்கை நிலைநாட்டுவ தாகும். சட்ட ஆளுகைக்கு வெளியில் நாம் இயங்க முடியாது. சிலர் அவ்வாறு செய்யுமாறு கேட்டாலும் கூட நாம் சட்டத்துக்கு மாறாக இயங்க முடியாது. பிரதம நீதியரசரும் இதற்கு விதிவிலக்காகமாட்டார்.

குடிமக்களின் கடமைகளை அரசமைப்பின் 28ஆவது ஷரத்து விளக்குகின்றது. குடிமகனின் கடமைகளில் அரசமைப்பை பாதுகாத்தல் அபிவிருத்திக்கும் அமைதி முயற்சிகளுக்கும் ஆக்கம் அளித்தலும் அடங்கும். ஒருவர்தனது மன நீதிக்கு அமைவாகத்தேர்ந்தெடுக்கும் தொழிலுக்குரிய கடமைகளை

(08ஆம் பக்கம் பார்க்க)

## தொலைபேசிக் கட்டணத்தை குறைக்கும் திட்டத்தை விரைந்து இறுதி செய்ய உத்தரவு

### ரெலிக்கொம் மற்றும் அதிகாரிகளுக்கு உயர்நீதிமன்றம் பணிப்பு

கொழும்பு, ஜூலை 10

தொலைபேசிக் கட்டணத்தை கணிசமான அளவு குறைப்பதற்கான திட்டத்தை அடுத்த வாரத்துக்குள் கூடி இறுதி செய்யும்படி ஸ்ரீலங்கா ரெலிக்கொம்முக்கும் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கும் உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

2003 ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதலாம் திகதி தொடக்கம் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் மேற்கொண்ட 11.48 வீத கட்டண அதிகரிப்பை பாவனையாளருக்கு மீண்டும் செலுத்துமாறு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் ஏற்கனவே ஸ்ரீலங்கா ரெலிக்கொம்முக்கு உத்தரவிட்டிருந்தது.

பாவனையாளர் சங்கம் ஒன்று தொடுத்த வழக்கின் மீதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனம் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தது.

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

வடமராட்சி லயன்ஸ் கழக ஆதரவில்
5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை

## இலவச பயிற்சிக் கருத்தரங்கு

**திரு. வே. அன்பழகன்**
(யாழ். பிரபல ஆசிரியர்)

இடம் : நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்
காலம் : 14-07-2007 9 a.m. - 2 p.m.
பதிவுகள் : பாடசாலை அதிபரின் ஊடாக
பதிவு செய்யுமிடங்கள் :

*நெல்லியடி :*
லயன் எஸ். அகிலதாஸ், நெல்லை சில்க்ஸ்,
லயன் சி.சிவம், சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை.

*பருத்தித்துறை :*
லயன் எஸ்.பத்மநாதன், கனன் போட்டோகொப்பி
லயன் என். சற்குணராஜா, சுசீலா நகை மாளிகை
(பதிவுகள் 500 மாணவர்களுக்கு மட்டும்)

**லயன் S. தவச்செல்வன்**
செயலாளர்.

(சி-52378)

## மரண அறிவித்தல்

### கோணாமலை இரத்தினம்

**(ஓய்வுபெற்ற சுகாதாரப் பரிசோதகர்)**

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது நீர்கொழும்பில் வசித்து வந்தவருமாகிய கோணாமலை இரத்தினம் 07.07.2007 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கோணாமலை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சின்னத்துரை (ஓய்வுபெற்ற ஆசிரியர்) தம்பதியரின் அன்பு மருமகனும் பாலயோகினி (ஓய்வுபெற்ற ஆசிரியை)யின் அன்புக் கணவரும் ரஜனி, ரவி, ராகுலன், டாக்டர் ரமணி ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவீந்திரன், வசந்தி, சுபாசினி, ராகுலன் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

'அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது நீர்கொழும்பு இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7/13, நிவியன் மாவத்தை,
நீர்கொழும்பு. தொ.பே. 031 222 4234.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



**எமது சக உத்தியோகத்தரும்
தற்போது தற்காலிகமாக
பிரதேசசெயலகம், சண்டிலிப்பாயில்
கடமையாற்றி வந்தவருமான
கிராம உத்தியோகத்தர்**

### அந்தோனி கிறிஸ்தோத்திரம் கிருபாகரன்

**அவர்களின் மறைவையொட்டி
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**பிரதேச செயலாளரும்,
உத்தியோகத்தர்களும்.**

நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.

(62575)

## விற்பனை

மிகச்சிறந்தாவனையில், மிக நல்ல நிலையில் உள்ள 4Sri xxxx வோக்ஸ் வெகன் (Volks Wagon- 1200) கார் விற்பனைக்குண்டு.

*தொடர்பு:*
0777 246222,
021 222 5173

(62573)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவலிங்கம் மனோன்மணி

**(கரம்பன்)**

கரம்பன் தெற்கு, ஊர்காவற்றுறையைப் பிறப் பிடமாகவும் இல. 07, முஸ்லீம் கல்லூரி வீதி, கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங் கம் மனோன்மணி நேற்று (09.07.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ருக்மணி மற்றும் சாரதாம்பாள், மங்கையர்க் கரசி, கனகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற செவ்வேள், சொர்ணலிங்கம், ஆறுமுகம் மற்றும் மனோகரன், சச்சிதானந்தன் ஆகியோரின் மாமியும், விஜிதரன் (ஊழியர்- பூபாலசிங்கம் புத்தகசாலை), அருந்ததி, முரளிதரன், சிவாதரன், காலஞ்சென்ற ஜெகத்ஜனனி மற்றும் நிவந்த வந்தனா, சுதர்சனா, வினோதினி, ஜெகதீபன், பிரதாபன், சிந்துஜா, நீரஜா, மிதுலா, நிசாந்தினி, பிரசாந்த், சாரங்கன், சங்கீதா, சுதர்சன், நிசாந்தன், மதிவதனி, மனோகரன், மதுராந்தன், சுபாசினி, திலகராஜா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் துவாரகா, துஷானி, மிதுஷன், வினுஜா, துஷானன், சாளினி, பிரசாத் ஆகியோரின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டடி வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 07,
முஸ்லிம் கல்லூரி வீதி,
(லைடன் சந்தி அருகில்),
கொட்டடி, யாழ்ப்பாணம்.
021 222 7997

தகவல்:
**கு. மனோகரன் (மருமகன்),
சு. சச்சிதானந்தம் (மருமகன்),
செ. விஜிதரன்
(பேரன்- ஊழியர், பூபாலசிங்கம் புத்தகசாலை).**

## மூன்றாண்டில் மறைந்தும் மறவாத நினைவலைகள்



**அமரர்**

### Dr. பொ.யோகலிங்கம்(J.P)

**ஜனனம்**
21 ★ 05 ★ 1926

**அஸ்தமனம்**
13 ★ 07 ★ 2004

**திதி: 10-07-2007**

பாசமாய் வளர்த்தீர் எம்மை பரிவுடன் பார்த்து வந்தீர்
வேகமாய் எமை விட்டு விரைந்து தான் சென்றதெங்கே?
நின்னது பிரிவை என்றும் நினைக்கவே முடியவில்லை
பழுதற்றார் பாரில் மறைந்தாலும் -
தொழுது அவர் தொண்டு பாராட்டல்
நமது கடன் நல்லோர் கடன்.

**உங்கள் ஆத்மா சாந்திப் பெற பிரார்த்திக்கின்றோம்.**

**மு.சுஜிதா
இ.விதுஷா.**

பொற்பதி வீதி,
கொக்குவில்.

(62565)

## மரண அறிவித்தல்



### திருமதி அரியகுட்டி ஸ்ரீரங்கம்

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அரியகுட்டி ஸ்ரீரங்கம் 08.07.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அரியகுட்டியின் அன்பு மனைவியும் அன்னம்மா, நித்தியலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி- நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் முருகப்பர்- இராமாசிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் துரைச்சாமி, சீவரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியும் சுப்பிரமணியம், ஐயாத்தைப்பிள்ளை, சிதம்பரப்பிள்ளை, தங்கமுத்து, இரத்தினம், தம்பிப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் சிவசுப்பிரமணியம், வசந்தராணி, குணபாலசிங்கம், ஜான் ஸிராணி, சிவநாதன் இந்திராணி, பாலகிருஷ்ணன், இராதகிருஷ்ணன், ஆனந்தகிருஷ்ணன், யாதவன், இந்திரகுமார், யசோதா, ஜனதா, பாஸ்கரன், ஜெயந்தன், நித்தியசீலன், ரஜனி, தயாளினி, நிறோசா, சுபஸ்ரீ ஆகியோரின் அன்புப் பேத்தியும் குமாலினி, துவாகரன், சிவப் பிரியா, சுதாகர், சந்திரகாஸ், முகுந்தன், அபிசுதன், மதுசிகா, துளசிகா, அபிநயா, சரண்யா, சாரங்கன், ஷாயிராம் ஆகியோரின் அன்புப்பூட்டியும் சோழன், பிரணவன், நர்மதா ஆகியோரின் கொப்பாட்டியும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, வள்ளியம்மை, வெற்றிவேலு, குமாரசாமி, தங்கமுத்து, நாகம்மா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (10.07.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் புங்குடுதீவு கள்ளியாறு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(62563)

தகவல்:
**து. அன்னம்மா (மகள்).**

gtz Partner for the Future Worldwide

## SRILANKAN -GERMAN DEVELOPMENT COOPERATION

## VACANCY

The German Technical Cooperation (**GTZ**) assisted Northern Rehabilitation Project (**NRP**), Rehabilitation of Economic Social Infrastructure Project (**REPSI**) is working in the North and East in conjunction with the Sri Lankan Government counterparts at district, divisional and community level providing support at Regional and National level particularly in development planning. REPSI is currently planning a more strategic regional approach generating synergies between supported projects operational in the North and the East.

**GTZ seeks to recruit a suitable qualified Female for the position of**

**RECEPTIONIST / TELEPHONE OPERATOR – JAFFNA**

**MAIN TASKS**

- Receive visitors in a courteous and welcoming manner
- Perform general receptionist duties and ensure the Reception Area is welcoming, safe and well organised
- Types a variety of correspondence, reports and other official documents
- Answer the telephone and direct callers to the correct person or deal with routine requests directly
- Maintain staff attendance sheet and staff movement register
- Assist the management in general administration duties
- Assist in logistical support when necessary
- Perform secretarial duties if and when required

**QUALIFICATIONS REQUIRED:**

**Education :** Completion of GCE A/L

**Skills and Competencies:** Cheerful, poised manner and presentation, both in person and on the telephone. Excellent interpersonal skills and customer service skills. Self starter capable of multi-tasking and being a team player. Flexible and 'can do' attitude. Excellent knowledge of MS Office.

**Experience:** 1-2 years experience in a similar capacity. Experience working for an International Organisation advantageous.

**Language:** Fluency in English and Tamil. Ability to converse in Sinhala will be an advantage.

**Age:** Less than 25 years.

Interested candidates should submit their CV with an accompanying hand written letter of application, including contact details, to.

**Senior Office Manager,
GTZ – REPSI / NRP
No.17, Kandy Road,
Jaffna.**

**NO LATER THAN 23rd JULY, 2007.**

(C-52877)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.ஆஸ்பத்திரிக்கு முன்பாக நடைபாதை வியாபாரம் அதிகரிப்பு

## நோயாளர் பெரும் பாதிப்பு

குருநகர், ஜூலை 10

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக நடைபாதை வியாபார நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இதனால் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்களும் பயணிகளும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

யாழ்.ஆஸ்பத்திரிக்கு முன்பாக உள்ள நடைபாதைகளில் சைக்கிள்களில் சிற்றுண்டி வகைகள் விற்பனை செய்யப்படுகின்றன. அத்துடன் நடைபாதை வியாபாரிகளின் விற்பனை நடவடிக்கைகளும் இந்த வீதியில் அதிகரித்துள்ளன.

பெருமளவானோர் இந்த வியாபாரிகளிடம் பொருள்களை வாங்குவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்த வியாபார நடவடிக்கைகளால் பாதசாரிகள் பயணம் செய்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

அத்துடன் வீதியோரங்களில் விற்பனை செய்யப்படும் சிற்றுண்டி வகைகள் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதை சுகாதாரப் பகுதியினர் சோதித்தறிய வேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (202-51)

# சங்கானை வைத்தியசாலையில் உள்ள 'ஜெனரேட்டர்' இயங்க முடியாத நிலையில்

## இரவு நேரங்களில் நோயாளர் சிரமம்

யாழ்ப்பாணம், ஜூலை.10

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் மின்பிறப்பாக்கிக்கான பற்றறி இல்லாமையால் இரவு நேரங்களில் வைத்தியர்களும் நோயர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இரவில் மின் தடைப்படும் நேரங்களில் விளக்குகளின் வெளிச்சத்திலேயே சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டிய பரிதாப நிலை உள்ளதாக வைத்தியசாலை வட்டாரத்தினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

குடாநாட்டில் மின்சார சபையினர் இரவு நேர மின் வெட்டை அமுல்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் சங்கானை வைத்திய சாலையில் மின்பிறப்பாக்கி ஒன்று உள்ளது. எனினும் அதனை இயக்குவதற்கு பற்றறி இல்லாமையால் மின் துண்டிப்பு நேரங்களில் வைத்தியசாலை விளக்கு வெளிச்சத்திலேயே இயங்குகின்றது.

அவசர சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களிலும் விளக்கு வெளிச்சத்தையே பயன்படுத்த வேண்டி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையும் நீண்ட காலமாக இயங்குவதில்லை. இதனால் வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகள் பாதிப்படைகின்றன.

இவ்விடயங்கள் தொடர்பாக பொறுப்பதிகாரிக்கும் மாவட்ட சுகாதாரப் பணிப்பாளருக்கும் பிரதேச மக்களால் மகஜர் கையளிக்கப்பட்டது. எனினும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (202)

## உள்ளூராட்சி உத்தியோகத்தர்களுக்கு விடுமுறைக்கான கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 10

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் உத்தியோகத்தர்களுக்கு கடந்த வருடம் பெற்றுக்கொள்ளாத விடுமுறைக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை உள்ளூராட்சி சபைகளில் பணிபுரியும் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களுக்குரிய கொடுப்பனவுகள் மாகாண சபையினால் உள்ளூராட்சி சபைகளுக்கு அனுப்பப்படவில்லையெனவும் இவர்களுக்கான கொடுப்பனவுகள் யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலவலகம் ஊடாக வழங்கப்படலாமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

விடுமுறை பெற்றுக்கொள்ளாத அரச உத்தியோகத்தர்களுக்கு 5 நாள்கள் தொடக்கம் 30 நாள்கள் வரையான வேதனம் வழங்க அரசு கடந்த வருடம் தீர்மானித்தமை குறிப்பிடத்தக்கது. (202-207)

# நெடுந்தீவிலுள்ள நோயாளர் அம்புலன்ஸ் படகு அரச ஊழியர் போக்குவரத்து சேவையிலும் ஈடுபடும்

நல்லூர், ஜூலை 10

நெடுந்தீவு பிரதேச நோயாளர்களுக்கான சேவையில் ஈடுபட்டுள்ள அம்புலன்ஸ் மோட்டார் படகு அரச ஊழியர்களின் போக்குவரத்துச் சேவையிலும் ஈடுபடவுள்ளது.

அம்புலன்ஸ் படகைச் சேவையில் ஈடுபடுத்தும் 'கியூமெடிக்கா' நிறுவனம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

வெளியிடங்களைச் சேர்ந்த நெடுந்தீவில் பணிபுரியும் அரச ஊழியர்கள் தமது சொந்த இடங்களில் இருந்து திங்கட்கிழமை காலை நெடுந்தீவுக்கு வந்து. வெள்ளிக்கிழமை பிற்பகலில் மீண்டும் திரும்புவது வழமை.

தற்போது துறைமுகத்தில் ஏற்படும் கடல் நீர் வற்றைக் காரணம் காட்டி அரச படகு குமுதினி தனது சேவைகளை அடிக்கடி நிறுத்திக் கொள்கின்றது. இதனால் பயணிகள் குறிப்பாக வெளியிடங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் உட்பட அரச ஊழியர்கள் உரிய நேரத்தில் தமது கடமைகளுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படுகின்றது.

இதனைக் கருத்திற்கொண்டு திங்கட்கிழமை காலையிலும் வெள்ளிக்கிழமை பிற்பகலிலும் அம்புலன்ஸ் மோட்டார் படகைச் சேவையில் ஈடுபடுத்த கியூமெடிக்கா தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202-111)

## கிளை முகாமையாளர்கள் இடமாற்றம்

நவாலி, ஜூலை 10

மானிப்பாய் ப.நோ.கூ. சங்கக் கிளைகளில் பல காலமாகப் பணியாற்றிய சகல கிளை முகாமையாளர்களும் இம்மாதம் முதல் வெவ்வேறு கிளைகளுக்கு சங்க நிர்வாகத்தினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (202-100)

# தரம் 6 மாணவர்களுக்கான சைவநெறிப் பாடப் புத்தகம் உரிய நேரத்தில் வரவில்லை; தனியாரால் விற்பனை!

யாழ்ப்பாணம், ஜூலை 10

தரம் 6மாணவர்களுக்கான சைவநெறிப் பாடப்புத்தகங்கள் பாடசாலைகளுக்கு வந்து சேர்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எனினும் கல்வியாண்டின் ஆரம்பத்திலேயே வெளியில் தனிப்பட்டவர்களால் விற்பனை செய்யப்பட்டதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

குடாநாட்டு மாணவர்களுக்கான இலவச பாடநூல்களில் பெரும்பாலானவை மிகவும் காலந்தாழ்த்தியே பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. சில பாடநூல்கள் இது வரை வந்துசேரவில்லை.

இந்நிலையில் தரம் 6 இற்கான சைவநெறிப் பாடநூல் வெளியாள்களால் 150ரூபா வீதம் விற்கப்பட்டுள்ளது. மாணவர்களும் தேவையின் நிமித்தம் அதனை வாங்கியதாக அறியப்படுகிறது.



வட்டு - யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்பப் பிரிவு பாடசாலை மேற்பார்வையாளர் வண. ஜி.நடராஜா எழுதிய 'யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி பிரிவு' நூல் வெளியீட்டு விழா அண்மையில் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அமெரிக்க மிசனைச் சேர்ந்த ஜெ. வொட்சன் முதல் பிரதியை நூலாசிரியர் வண.ஜி.நடராஜாவிடம் இருந்து பெறுவதையும் - கல்லூரி முதல்வர் நோயல் ஏ.விமலேந்திரன் தலைமை வகிப்பதையும் படத்தில் காணலாம். (படம்:எஸ்.ரமேஷ்)

## வறிய குடும்பங்களுக்கு 'பார்க்' நிறுவனம் உதவி

யாழ்ப்பாணம்,ஜூலை 10

பசுபிக் ஆசிய மூலவள நிறுவனம் அவசர நிவாரண உதவித் திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட வறிய குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றது.

அண்மையில் மணற்காடு, தும்பளை கிழக்கு, வேலணை-துறையூர் ஆகிய கிராமங்களில் இனங்காணப்பட்ட குடும்பங்களுக்கு அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கேற்ப அத்தியாவசிய உணவுப் பொருள்களை இந் நிறுவனம் வழங்கியுள்ளது. (202)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

### நூலகக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூலை 10

உள்ளூராட்சி வாரத்தையொட்டிய நூலகக் கண்காட்சி இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ்.பொதுநூலகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. கண்காட்சியை யாழ். மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைப்பார்.

இன்று தொடக்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை கண்காட்சி நடைபெறும். கண்காட்சியில் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட புத்தகங்களும் இறுவெட்டுக்களும் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன. (202-120)

### நெடுந்தீவுக் கோட்ட புலமைப் பரிசில் பரீட்சை

நல்லூர்,ஜூலை 10

நெடுந்தீவு கோட்ட மட்டத்திலான தரம் 5 புலமைப் பரிசில் இறுதிப் பரீட்சை அடுத்த மாதம் 4ஆம் திகதி சனிக்கிழமை நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என நெடுந்தீவுக் கோட்ட கல்வி அதிகாரி க.அரசரத்தினம் தெரிவித்தார்.

ஐந்தாம் தர புலமைப் பரிசில் மாணவர்களின் நலன் கருதி திட்டமிடப்பட்ட ஆறு பரீட்சைகளில் நான்கு பரீட்சைகள் முடிவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (202-111)

### வினாத்தாளில் குளறுபடி; மாணவர்கள் குழப்பம்!

யாழ்ப்பாணம்,ஜூலை 10

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கென அண்மையில் நடத்திய இந்து நாகரிகப் பாடப் பரீட்சையில் இரு பகுதிகளிலும் ஒரே வினாக்கள் சில இடம்பெற்றிருந்தன. இது மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியது.

யாழ்.கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட இப் பரீட்சை யில் பகுதி I வினாத்தாளில் இடம்பெற்ற வினாக்களில் சில பகுதி II இல் 'ஆ' பிரிவு வினாக்களாக அச்சிடப்பட்டிருந்தன. இதனால் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டது. (202-45)

### மண்டுவில் கிராமத்தில் நியாப் திட்டத்தின் வேலைகள் பூர்த்தி

தென்மராட்சி பிரதேசத்தில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட மண்டுவில் கிராமத்தில் நியாப் நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் பூர்த்தியடைந்துள்ளன.

இக் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட பொது நோக்கு மண்டபம் அமைத்தல், இரண்டு பொதுக் கிணறுகள் அமைத்தல், நான்கு வீதிகள் புனரமைப்பு ஆகிய வேலைத் திட்டங்கள் பூர்த்தியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக் கிராமத்தில் மணல் வீதிகளாக காணப்பட்ட கோட்டையடி வீதி, செம்பன் தோட்ட வீதி, அம்மன் கோவில் ஒழுங்கை, மடத்தடி இரண்டாம் ஒழுங்கை ஆகிய வீதிகள் செப்பனிடப்பட்டுள்ளன.

நியாப் நிறுவனத்தினால் பிரதேசத்தில் ஐந்து மையக் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (202-207)

# தென்மராட்சி வலய கணித, விஞ்ஞான வினாடி வினாப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 10

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கணித, விஞ்ஞான வினாடி வினாப் போட்டிகளில் வெற்றிபெற்றோர் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

**விஞ்ஞானம் தமிழ்மொழி மூலம்**

*தரம் 6:* இ.சங்கமி (உசன் இராமநாதன் ம.வி), இ.கஜானன் (மீசாலை வீரசிங்கம் ம.வி), ம.மயூரி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி).

*தரம் 7:* சி.சுஜிவன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கு.கனன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ப.கவிதா (கச்சாய் அ.த.க.பா), தெ. தட்சாயினி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), த.தாரகா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), த.தர்சிகன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), வ.காவேரி (கச்சாய் அ.த.க.பா), கி.தேனுகா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), செ.சாருகா (மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தி), சி.நிஷாந்தினி (சாவகச்சேரி இந்தக் கல்லூரி), பா.நிலாந்தினி (மீசாலை வீரசிங்கம் ம.வி.), க.சஞ்சீவன் (மீசாலை வீரசிங்கம் ம.வி)

ஸ்ரீ.விசாகன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), வ.துர்சிகா (வரணி ம.வி), க.நிஜிந்தா (கைதடி விக்னேஸ்வரா வித்தி.).

**ஆங்கிலமொழி மூலம்**

*தரம்: 6* பி.துவிதா (மீசாலை வீரசிங்கம் ம.வி), ரி.இந்துஜன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கே.தர்சிகா (மீசாலை வீரசிங்கம் ம.வி),

*தரம் 7:* ஜே.கம்சனா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), டி.தர்சிகா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), ரி.ஆதிரை (மீசாலை வீரசிங்கம் ம.வி).

*தரம் 8:* எஸ்.சாகீசன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எஸ்.கௌசிகா(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), என்.சங்கீதன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

*தரம் 9:* ஜே.அனோஜன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பி.நேமினி (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), எஸ்.சுமிந்தா (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி).

**கணிதம் தமிழ்மொழி மூலமானது**

*தரம் 6:* பி.ஆதவன் (குடமியன் அ.த.க.பா.), ஆர்.சிருஷ்டிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எஸ்.வின்சன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

*தரம்7:* ரி.செந்தாளன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எம்.தனுஸ்ராஜ் (மீசாலை வீரசிங்கம் ம.வி), எஸ்.கேதாரன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

*தரம் 8:* ரி.சிவதாஸ் (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி).ஆர்.நதீஸ்ராம் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சி.கிறிஸ்ரிரா (உசன் இராமநாதன் ம.வி)

*தரம் 9:* யூ.கிருத்திகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பி.சாகித்தியன்(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எஸ்.லக்ஷ்மியா (சாவகச்சேரி இந்துக்கல்லூரி).

*தரம்10:* எஸ்.நிஸாந்தி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).எஸ்.ப[illegible] (மீசாலை வீரசிங்கம் ம.வி), எஸ்.ரா[illegible] (மீசாலை வீரசிங்கம் ம.வி).

*தரம்11:* எஸ்.யசோதரன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஜே.ஜெயதர்ஸினி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ரி.தர்மிலன் (அல்லாரை அ.த.க.பாடசாலை).

**கணிதம் ஆங்கிலமொழி மூலமானது**

*தரம் 6:* ரி.பிரகாஜ் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பவித்திரா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எஸ்.பானுகோபன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஆர்.சிந்துஜா (மீசாலை வீரசிங்கம் ம.வி.).

*தரம் 7:* எஸ்.ரஜீதன் (மீசாலை வீரசிங்கம் ம.வி), கே.டிலக்சிகா (மீசாலை வீரசிங்கம் ம.வி), சித்திராங்கி (மீசாலை வீரசிங்கம் ம.வி).

*தரம்8:* எஸ்.சஜீகன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பி.அபிவர்னா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), தனுஷன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

*தரம்9:* ரி.அனோஜன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எம்.நிவேதிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எஸ்.விசாகன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**கணிதம்- விஞ்ஞானம் (பொது) க.பொ.த.(உ/த) (தமிழ்மொழி மூலமானது)**

*தரம் 12:* என்.லக்சிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), என்.சஞ்சயன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எம்.ஞானகரன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

*தரம் 13:* சு.பார்த்தீபன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), [illegible] (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), த.பிரதீபன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வலி.கிழக்கு வார உள்ளூராட்சித் தின நிகழ்வு

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.கிழக்குப் பிரதேச சபையின் அனுசரணையுடன் கலைமதி முன்பள்ளி நடத்தும் விளையாட்டுப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

கலைமதி சனசமூக நிலையத் தலைவர் செ.றஞ்சிதமலர் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் எஸ்.நடராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (50-203)


புதிய இடத்தில் புதிய அறிமுகம்



பாவனைக்கு மிக இலகுவான நவீன புத்தம் புதிய Laptop கணனிகள் மூன்று வருட உத்தரவாதத்துடன் மிகக் குறைந்த விலையில் HP-Compaq, P4, 256MB, 60GB, Compo Drive, Wide Screen

STP Your Partner in IT Solutions 149, Kasthuriar Road. Jaffna. T.P:2222674


## மங்கள சமரவீர இந்தியா செல்கிறார்

கொழும்பு,ஜூலை10

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி மக்கள் பிரிவு என்ற ஒரு புதிய கட்சியை ஆரம்பித்துள்ள முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர இந்தியாவுக்குப் பயணமாகின்றார்.

இந்தியத்தலைவர்களுடன் இலங்கையின் இன்றைய அரசியல் நிலைமை பற்றிக் கலந்துரையாடவிருக்கும் சமரவீர, தமது புதியகட்சியின் நிலைப்பாடுகள் குறித்து இந்தியத் தலைவர்களுக்கு எடுத்துரைப்பார் என்று தெரியவருகின்றது.

ஜூலை 11, 12 ஆம் திகதிகளில் இந்தியத் தலைவர்களைச் சந்திக்கவிருக்கும் மங்கள சமர வீரவுடன் அவரது சகபாடியான சிறிபதி சூரியாராச்சியும் செல்லவிருக்கிறார். (ப)

## மரண அறிவித்தல்

### விஸ்வலிங்கம் நடனசுந்தரம்

*(மண்டைதீவு - 08)*

மண்டைதீவு தெற்கைப் பிறப்பிடமாகவும் வேலணையை வசிப்பிடமாகவும் கரியாலை, நாகபடுவானைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் நடனசுந்தரம் அவர்கள் (08-07-2007) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் - அன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்ற லோகேஸ்வரியின் அன்புக்கணவரும் கனகசுந்தரம், யோகலிங்கம், காலஞ்சென்ற யோகாம்பிகை, சோமசுந்தரம், பஞ்சலிங்கம், ராசலிங்கம்; அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09-07-2007) திங்கட்கிழமை அவரின் தற்காலிக இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரியாலை,
நாகபடுவான். (62567)

தகவல்:
**சகோதரர்கள்.**

## 2ஆம் வருட சிரார்த்ததின நினைவஞ்சலி

**செல்வி**
**சோபனா திருபாலசிங்கம்**



அன்னை மடியில்
28 - 11 - 1982

ஆண்டவன் அடியில்
01 - 07 - 2005

பொன்னை இழந்தாலும் போகட்டும்
என்றிருப்போம்
கண்ணை இழந்தாலும் காலத்தை
நொந்திருப்போம்
வண்ணமகள் உனை இழந்து
வாடிவருந்தும் நாம்
வற்றாக்கை அம்மனைத் துதிக்கின்றோம்
உன்ஆன்ம சாந்திக்காக.

பழ வீடு,
இளவாலை. (62557)

**பாசமிகு பெற்றோரும்,**
**பிரியமிகு சகோதரரும்.**

## நீங்காத நினைவுகள்





பத்தமேனி அச்சுவேலியைப்
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட
**அமரர் சரவணமுத்து தம்பிராசா**
மலர்வு 04.05.1932 உதிர்வு 21.06.2006

**திருமதி தம்பிராசா**
**தெய்வானைப்பிள்ளை**
மலர்வு 07.08.1937 உதிர்வு 13.08.2005

எமது அன்புத்தெய்வங்களின் ஆத்மசாந்திப்பிரார்த்தனை இன்று (10.07.2007) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பத்தமேனி,
அச்சுவேலி. (62558)

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
(திரு.திருமதி கருணாகரன் குடும்பத்தினர்).



## கண்ணீர் அஞ்சலி

### திருமதி
### கோகிலாம்பாள் சிவராசா

**(முன்னாள் ஆங்கில ஆசிரியை, இளவாலை மெய்கண்டான் ம.வி.)**

ஆங்கிலப் பாடத்தை
ஆரம்ப வகுப்புகளில்
ஆர்வமுடன் புகட்டி
என்னை ஆங்கில ஆசிரியையாக
எழுத்துத் துறையில்
ஆங்கிலமொழிக் கவிஞராக
உருவாக்கம் செய்திட அன்று
அத்திபாரமிட்ட என் முதற்குருவே!
அத்தை மகளே! மைத்துனியே!
அமலனடி சேர்ந்திட்ட
அறிவுத் தெய்வமே!
உங்கள் பாதங்களில்
நன்றி நிறை கண்ணீர்ப் பூக்களை
காணிக்கையாய் ஆக்குகின்றேன்.

**கனக்கும் இதயத்துடன்**

பத்தாவத்தை,
இளவாலை. (62555)

**செல்வி நகநந்தினி**
**சங்கரப்பிள்ளை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை விவகாரத்தில் "கவனித்துக் கொண்டிருக்கும்" போக்கை இந்தியா கைவிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றது !

## பிராந்திய வல்லரசு என்ற தோற்றப்பாட்டுக்கு அச்சுறுத்தலாக வருவதை அதனால் சகிக்க முடியாது

## மஹிந்த அரசின் போக்குக் குறித்துக் கவலை

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக தனது போர் நடவடிக்கைகளை இலங்கை அரசு தீவிரப்படுத்தத் தொடங்கியிருப்பதானது இந்திய அரசின் கவலைகளை அதிகரிக்கச் செய்துள்ளன. இந்தியாவின் கேந்திர நிலையங்கள் மீது இந்த செயற்பாடு பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம் என்று கருதப்படுகின்றது. அத்துடன் இந்தியாவின் பிராந்திய வல்லரசு என்ற தோற்றப்பாட்டுக்கும் இது அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம் என்று புதுடில்லி வட்டாரங்கள் கவலை கொண்டுள்ளன.

மே 31ஆம் திகதி இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் இலங்கைக்கு விடுத்திருந்த ஒரு எச்சரிக்கையில் புதுடில்லியின் நோக்கங்களை ஊடறுத்துக்கொண்டு செல்லவேண்டாம் என்று குறிப்பிட்டிருந்தார்.

சீனாவிடமிருந்தும் பாகிஸ்தானிடமிருந்தும் இலங்கை ஆயுதங்கள் வாங்கியிருந்தமை தொடர்பாக நாராயணன் குறிப்பிட்டு இந்த எச்சரிக்கையை விடுத்திருந்தார்.

**புதுடில்லியில் இருந்து:**
**தீப்பல் ஜெயசேகர**

இப்பிராந்தியத்தின் வல்லரசு இந்தியாதான் என்பதை இலங்கை உணர்ந்து கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது. ஆயுதங்களுக்காக பாகிஸ்தானுக்கும் சீனாவுக்கும் போவதை அது நிறுத்திக் கொள்ள வேண்டும். எமது வெளிநாட்டுக் கொள்கைக்குள் அடங்கும் விதத்தில் நாங்கள் அவர்களுக்கு உதவத் தயாராக இருக்கிறோம் என்று அவர் தெரிவித்திருந்தார்.

அதேவேளை தென்னிந்தியத் தலைவர்களை அவர் சந்தித்ததன் பின்னர் வெளியிட்ட கருத்தில் இலங்கைக்கு தாக்குதல் ஆயுதங்களை வழங்குவதில்லையென்ற இந்தியாவின் முந்திய நிலைப்பாட்டை அவர் மீண்டும் வலியுறுத்தியிருந்தார்.

### பாகிஸ்தான் எதிர்க்குரல்

இஸ்லாமபாத்திலும், கொழும்பிலும் நாராயணனின் கருத்துக்கு எதிராக வெளிப்பாடுகள் கிளம்பின.

பிராந்தியத்திலுள்ள எந்த ஒரு நாடும் ஆதிக்கஞ் செலுத்த முனைவதை பாகிஸ்தான் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்று பாகிஸ்தான் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இது முற்றிலும் இலங்கை தீர்மானிக்க வேண்டிய விடயம் என்றார் அவர்.

இந்தியாவுடன் நெருங்கிய உறவைப் பேண விரும்புவதாக இலங்கை அரசு மீளவும் தெரிவித்துக் கொண்ட அதேவேளை, முக்கிய பத்திரிகைகள் இந்தியா பயமுறுத்தும் போக்கை கடைப்பிடிக்க முயல்வதாகத் தலையங்கங்கள் தீட்டியிருந்தன. தீவிரவாத சிங்கள அமைப்பான ஜே.வி.பி இந்தியா மீளவும் மோசமான அண்டை நாட்டுக் கொள்கையைப் பின்பற்றக் கூடாது என்று கூக்குரல் இட்டது.


2005 நவம்பரில் பதவிக்கு வந்ததன் பின்னர் மகிந்த ராஜபக்ஷ பிரதான வல்லரசுக்களால் ஆதரிக்கப்பட்ட அமெரிக்க முயற்சியை ஓரங்கட்டிவிட்டார். 2002ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தை வெளிப்படையாகவே மீறி இராணுவம் விடுதலைப்புலிகளின் பிரதேசங்களைக் கைப்பற்றியது. வடபகுதியிலும் நிலைகளைக் கைப்பற்றப் போவதாக அறிவித்தது.


நூற்றுக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டனர். விமானம் மற்றும் ஆட்லறித் தாக்குதல்களால் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் வீடு வாசலிழந்து நிர்க்கதிக்கு உள்ளாக்கப்பட்டார்கள். அதேசமயம், படையினர் படுகொலைகளிலும் ஆள்கடத்தல்களிலும் ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

### இந்தியாவின் அச்சம்

விடுதலைப்புலிகளின் தனிநாடு அமைக்கும் அபிலாஷையை இந்தியா ஆதரிக்கவில்லை. இது இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் பிரதிபலிப்புக்களை ஏற்படுத்தும் என்று அஞ்சப்படுகின்றது. அந்த அச்சம் காரணமாகவே பிரதம மந்திரி ராஜீவ் காந்தி கொலையைத் தொடர்ந்து இந்தியாவில் பயங்கரவாத அமைப்பாக விடுதலைப்புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டது.


மஹிந்த


மன்மோகன்சிங்


எம்.கே.நாராயணன்

இதேவேளை இலங்கை அரசின் வெளிப்படையான தமிழருக்கு எதிரான சண்டையை ஆதரிப்பதன் மூலம் இந்திய அரசு தமிழ்நாட்டிலுள்ள தனது தோழமைக் கட்சிகளைப் பகைத்துக் கொள்ள முடியாது.

இரண்டு நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் தமிழ் நாட்டின் எதிர்ப்புக் காரணமாக கிடப்பில் போடப்பட்டுள்ளது. அதே காரணத்துக்காக தாக்குதல் ஆயுதங்களை இலங்கைக்கு விற்பதற்கும் இந்தியா தயக்கம் காட்டி வருகின்றது.

### சீனா, பாகிஸ்தான் தலையீடு

இதேவேளை சீனாவும் பாகிஸ்தானும் இலங்கையில் காலூன்ற எடுத்துவரும் முயற்சிகள் இந்தியாவுக்குத் தலையிடியைக் கொடுத்துள்ளது.

பாகிஸ்தான் பிரதான போர் ஆயுத விற்பனையாளராக உருவெடுத்துள்ளது. பல்குழல் எறிகணை செலுத்திகள், டாங்கிகள், ஆட்லறி மற்றும் துப்பாக்கிகளை பாகிஸ்தான் கொழும்புக்கு விற்றுள்ளது. தோட்டாக்களும் சிறு ஆயுதங்களும் சீனாவிடம் வாங்கப்பட்டுள் என. நவீன ரக ராடர் கருவிகளுக்கும் சீனாவி டம் 'ஓடர்' கொடுக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டையில் 360 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் ஆழ்கடல் துறைமுக மொன்றைக் கட்டுவதில் சீனா ஈடுபட்டுள்ளது. சீனக் கப்பல்களின் வருகைக்கு இத்துறைமுகம் வசதியாகவிருக்கப்போகின்றது.

இந்தியா இலங்கையின் உள்நாட்டுப் போரில் தலையிடாமலே இருந்து வருவதற்கு சர்வதேச நாடுகளின் அமைதி முயற்சி வெற்றியளிக்கும் என்ற எதிர்பார்ப்பே காரணம்.

### போரை மௌனமாக ஆதரிக்கும் அமெரிக்கா

இருதரப்புக்களையும் மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு மேற்குலக நாடுகள் குறிப்பாக அமெரிக்கா கொண்டுவரும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. புஷ் நிர்வாகத்தைப் பொறுத்தவரை அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படியான வேண்டுகோள்களை விடுத்துவந்த வேளை புதிதாகப் போர் தொடக்கப்பட்டதை மௌனமாக இருந்து ஆதரித்து வந்துள்ளது.

இலங்கையில் அமெரிக்காவின் தொடர்பு அதிகரித்துவருவதும் இந்தியாவுக்கு ஒரு பெருங்கவலையான விடயம்.

### இந்தியாவின் முன் அறிவிப்பு?

நாராயணனின் வெளிப்படையான கருத்து வெளிப்பாடு இந்தியாவின் இந்தக் கவலைகளையெல்லாம் உள்ளடக்கியிருக்கும் என்பது ஒருபுறமிருக்க அது இலங்கை விவகாரத்தில் இன்னும் அதிகமான நேரடி அக்கறையைச் செலுத்துவதற்கான முன்னறிவிப்பாகவும் இது இருக்கலாம்.

இந்தியாவிலுள்ள பாதுகாப்பு கல்வி மற்றும் பாதுகாப்பிற்கான நிலையம் வெளியிட்ட அறிக்கையில், இலங்கை அகதிகளின் வருகை அதிகரிப்பானது தமிழ்நாட்டில் அரசியல் தாக்கங்களை ஏற்படுத்தும் நிலைக்கு வந்து விட்டது, இலங்கையின் இனப்பிரச்சினை மேலும் மோசமடையுமானால் இந்திய மாநிலங்களில் பெரும் தாக்கங்கள் ஏற்படுத்தக்கூடும். அதனால் இந்தியாவின் ''நடவடிக்கையின்றி கவனித்துக்

**தமிழில்: நந்தன்**

கொண்டிருக்கும்'' கொள்கையை மாற்றவேண்டிய நிலை ஏற்படக்கூடும் என்று தெரிவித்திருந்தனர். தமிழ்மக்களின் உரிமைகளை வழங்கும்படி செய்யவும் யுத்தத்தின் காரணமாக மனித உயிர்கள் அழிவதை நிறுத்தவும் மற்றும் அமைதி முயற்சியை மீண்டும் ஆரம்பிக் கவும் இலங்கை அரசைக் கோரும்படியாக அந்த அமைப்பு இந்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போருக்கு எந்த விதத்திலும் ஆதரவளிப்பதானால் இலங்கை அரசு மிதவாதத் தமிழ் தரப்புகளுக்கு எந்த அளவு அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுக்க ஆயத்தமாக இருக்கின்றது என்பதை வைத்துக் கணிக்க வேண்டும் என்று அது மேலும் தெரிவித்திருக்கின்றது.

''ஒன்றும் செய்வதில்லை'' என்ற நிலைப்பாட்டை இந்திய அரசு இப்போதும் கூட மறுசீரமைத்துக் கொண்டுவிட்டதாகத் தெரியவில்லை. ஆனால் இலங்கையில் நடைபெற்றுவரும் போரானது மேலும் மேசமடைந்து பிராந்தியம் முழுவதும் எதிர்த் தாக்கங்களை ஏற்படுத்துமானால், இந்தியா தலையிட்டு அதன் கேந்திர நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்ற இக்கட்டான நிலை ஏற்படும்போது, இலங்கை நாடு போட்டிகளுக்கும் பூசல்களுக்கும் இடந்தரும் நாடாக அமைந்துவிடக் கூடும்.

*

# மாவட்டமட்ட மெய்வன்மைப் போட்டி: வலிகாமம் வலயப் பாடசாலைகள் முன்னணி

## 70 தங்கம்; 40 வெள்ளி; 25 வெண்கலப் பதக்கங்கள்

வலி.வடக்கு,ஜூலை10

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற மாவட்ட மட்டத்திலான மெய்வன்மைப் போட்டிகளில் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகள் முன்னணியில் உள்ளன.

வலிகாமம் கல்வி வலயம் முதலாம் இடத்தில் 70 தங்கப் பதக்கங்களையும் இரண்டாம் இடத்தில் 40 வெள்ளிப்பதக்கங்களையும் மூன்றாம் இடத்தில் 25 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று முன்னணியில் உள்ளன. வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராசா இதனை தெரிவித்தார்.

அத்துடன், குழு நிலைப் போட்டிகளில் 12 போட்டிகளில் முதலாம் இடத்தையும் 6 போட்டிகளில் இரண்டாம் இடத்தையும் வலிகாமம் கல்வி வலயம் பெற்றுள்ளது. அத்துடன்,வலிகாமவலயத்தில்மெய்வன்மை போட்டிகளில் முதலாம் இடத்தை 58 பேரும் இரண்டாம் இடத்தை 34 பேரும் மூன்றாம் இடத்தை 22 பேரும் பெற்றுக் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.(50-86)



நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபைப் பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மின்சார சபையின் வடமராட்சி மின் அத்தியட்சகர் பொ.இராமலிங்கமூர்த்தி பாடசாலைக் கொடியை ஏற்றுவதை முதலாவது படத்திலும் மாணவர்கள் போட்டியில் ஈடுபட்டிருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: [illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்ரா கிண்ணத் துடுப்பாட்டம்

## கொக்குவில் இந்து வென்றது

யாழ்ப்பாணம், ஜூலை 10

அஸ்ரா கிண்ணத்திற்கான யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினருக்கிடையேயான ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி வெற்றி பெற்றது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் மேதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் அனைத்து விக்கெட்டுகளையும் 56 ஓட்டங்களுக்குள் இழந்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 130 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் 9 விக்கெட்டுகளை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

(50-86)

## யாழ்.இந்துக் கல்லூரி வெற்றி

அஸ்ரா கிண்ணத்திற்கான யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினருக்கிடையிலான கிரிக்கெட் போட்டியொன்றில் யாழ்ப்பாணம் இந்துக் இந்துக் கல்லூரி ஒரு இன்னிங்ஸ் மற்றும் 110 ஓட்டங்களினாலும் வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் யாழ்.இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணி 33.3 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியாக் கல்லூரி அணி 31.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸையும் விளையாடிய விக்ரோறியாக் கல்லூரி அணி 22.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 37 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்ட நிலையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஒரு இன்னிங்ஸ் மற்றும் 110 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (50-86)

## உடற்பயிற்சிப் போட்டியில் பாலசுப்பிரமணிய வித்தி. வெற்றி

நவாலி,ஜூலை10

பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை வலய மட்டத்தில் முதலாம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண் டது.

இவ்விரு அணிகளும் மாகாண மட்டத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.


(50-100)

## The phone Shop Manipay

எம்மிடம் சகலவிதமான Hand Phone களும்
* Soft ware * Hard ware Repairing செய்து கொடுக்கப்படும்.
குறிப்பு:- Nokia, 6630, 6680, 6681, N70, N91
என்பன Unlock செய்து கொடுக்கப்படும்.

Address: **The Phone Shop**
Alady Junction, Manipay.
T.P.No. 0777571910 (62457)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25 - 09 - 1928 | 21 - 06 - 2006 |

### அமரர் அருணாசலம் தம்பிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற அதிபர்)

திதி: ஆனி மாத அபரபட்ஷ ஏகாதசி


பெற்று வளர்த்தெமக்குப்
பெருமை பெறக் கல்விதந்து
உத்தமராக்கி எம்மை
உலகறிய வாழவைத்த
அப்பாவே! நீர் மறைந்து
ஆண்டொன்று சென்றாலும்
எப்போதும் உங்களை எம்
இதயத்தில் தொழுதிடுவோம்.

'அருளகம்'
பிரதான வீதி,
இளவாலை. (62522)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

எங்கள் அன்புத் தந்தையின்

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 21 - 05 - 1926 | 13 - 07 - 2004 |

### அமரர் Dr. பொன்னையா யோகலிங்கம் (J.P)

எங்கள் அன்புத் தெய்வமே-நீங்கள்
எங்கள் இதயத்தை அன்பினால் நிறைத்தீர்கள்
காரியங்களில் நேர்மையும் கருணையும் காட்டினீர்கள்
தங்களின் அன்பு முகமும் அனைவரையும்
அனுசரிக்கும் பண்பும்
என்றும் எங்கள் இதயத்தில் தாங்கி நிற்கும்.
தங்களின் ஆத்மா சாந்தியடைய இந்நாளில்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவரின் மூன்றாம் ஆண்டு தேய்பிறை ஏகாதசி திதியாகிய இன்று (10.07.2007) செவ்வாய்க்கிழமை தாய், தந்தையாகிய திரு.திருமதி பொன்னையா, திருமதி யோகலிங்கம் மற்றும் திரு. திருமதி நடராசா (சகோதரர், மனைவி), திரு.திருமதி. இராஜலிங்கம் (சகோதரர், மனைவி), திரு.இரத்தினம் (சகோதரர்), திரு.திருமதி. குமாரசாமி (சகோதரர், மனைவி) ஆகியோரின் ஆத்மாவும் சாந்தியடைய பிரார்த்திப்போம்.

ஆத்ம சாந்திப் பிரார்த்தனை கொக்குவில் கிழக்கு கோணாவளை வைரவர் சுவாமி கோயிலில் இன்று 10.07.2007 இல் நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு மகேஸ்வர பூசையிலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"கோவிந்த வாசா",
பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (62545)

தகவல்:-மகள்
திருமதி யோகவதனி விஜயகுமாரன்
7A Vant Road, Toofing Brod way,
S.W.17:8, London.

## 31 ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

### நாகலிங்கம் சிவசம்பு

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 02.09.1923 | 11.06.2007 |

பாரத்தின் பிறப்பாய் மண்ணின் உறைவாய்
எங்கள் மனதில் அணையாத் தீபமாய்
எங்கள் உள்ளமெல்லாம் உறையும் அன்புத் தெய்வமாய்
எம்மையெல்லாம் கதிகலங்க வைத்து வானுலகம் சென்றீரே
31 நாள் கழிந்தாலும் மறக்கவில்லை உங்கள் நினைவுகள்
எங்கள் உள்ளங்களில் உங்கள் நினைவுகளோடு
வாழுகின்றோம்.

கடந்த 11.06.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் பல வகையில் உதவி செய்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு நாளை (11.07.2007) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,பூட்டப்பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள், மைத்துனர்மார், மைத்துனிமார்.

தம்பாட்டி,
ஊர்காவற்றுறை. (62552)

## மணமகன் தேவை

ஆஸ்திரேலியா MBA மணமகளுக்கு சைவ மணமகன் தேவை. ஸ்பொன்சரில் அழைக்கப்படும். சாதகம் அனுப்பவும். ஸ்ரீலஸ்ரீ சு.சிவசண்முகானந்தக் குருக்கள், கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை. (62521)

## ஆண்டு ஒன்றில் ஆறா நினைவுகளுடன்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 25 - 07 - 1923 | 12 - 07 - 2006 |

### REV. SR. M.ANTONINA A.C

கல்விக்கு அணி சேர்த்து காலமெல்லாம் ஓயாது
கால்பதித்த இடமெல்லாம் பதிவுகள் மிகநாட்டி
சொல்லாலும் செயலாலும் துறவறத்தின்
ஒளிகாட்டி
சொல்லாமல் சென்று ஆண்டும் ஒன்றாச்சே.

நன்றித் திருப்பலிகள்:
11.07.2007 புலோலி புனித சூசையப்பர் ஆலயம் - 6.15 a.m.
12.07.2007 யாழ்.O.L.R.ஆலயம் 6.00 a.m.

(62550) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி மாதவர் நல்லமுத்து

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாதவர் நல்லமுத்து 09.07.2007 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் முருகேசு மாதவரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சரவணமுத்து-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து, குமாரசாமி, செவ்வந்தி, அன்னபூரணம் மற்றும் அரசலிங்கம், அன்னம்மா, ஞானமுத்து, குணரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கோமதி, கணேசலிங்கம், சாந்தினி (சுவிஸ்), கருணாகரன் ஆகியோரின் பாசமிகு தாயும் ரவிச்சந்திரன், ஜெயலட்சுமி, தேவராசா, யசிந்தா ஆகியோரின் அன்பு மாமியும் சுஜந்தினி, சுதாகரன், ஜெயந்தினி (பிரான்ஸ்), சுரேஸ்குமார், நிஷாந்தி, நிஷாந், கிருஷாந்தி, தினேஸ், றஜீவன், ஜெனித்தா, றெஜீனா, மேனன், ஜெயரூபினி, அஜீலன், லக்ஷனா ஆகியோரின் அன்புப் பேத்தியும் அபிநயாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
குமார் உணவகம், மருதடி,
ரவி தேநீர்அகம், மானிப்பாய்.

வடலித்தோட்டம்,
மானிப்பாய். (62566)

## விவசாயிகள் சம்மேளனம் உருவாக்கக் கோரிக்கை

நவாலி ஜூலை10

நவாலி வடக்கு (ஜே/134) கிராம அலுவலர் பிரிவுக்கென புதிய விவசாயிகள் சம்மேளனம் உருவாக்கப்படவேண்டும்.

இவ்வாறு நவாலி ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்த சனசமூக நிலையத்தின் தலைவர், யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சனைக் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

இக்கிராமத்தில் 540 விவசாயிகள் வாழ்கின்றனர். இந்த விவசாயிகளின் நன்மை கருதி இப்பிரிவுக்கென விவசாய சம்மேளனம் உருவாக்கப்பட வேண்டும் என அக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

(202-95)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### கணபதிப்பிள்ளை தங்கராசா

(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 15.06.1921 | 21.06.2006 |

திதி: அபரபட்ஷ ஏகாதசி 10.07.2007

ஆண்டொன்று ஆனதையா!
ஆறவில்லை எம் துயரம்
மீண்டும் ஒரு பிறப்பெடுத்து
எம் இல்லம் சிரிக்க வாரும் ஐயா!

கலைநகர்,
வட்டு - வடக்கு,சித்தன்கேணி.

குடும்பத்தினர். (62539)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 ★ 04 ★ 1949 | 11 ★ 06 ★ 2007 |

### அமரர் முத்துக்குமாரு கந்தஞானி

(ஸ்ரீ மனோன்மணி ஒலி, ஒளி உரிமையாளர்)

11.06.2007 அன்று கனகபுரம் கிளிநொச்சியில் காலமான எமது குடும்ப விளக்கின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (11.07.2007) புதன்கிழமை கிளிநொச்சி கனகபுரத்தில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதே நேரம் நாளை (11.07.2007) புதன் கிழமை ஊர்காவற்றுறை, தம்பாட்டியில் உள்ள அன்னாரின் மைத்துனர் ஐயாத்துரை சிவநேசபிள்ளை அவர்களின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தம்பாட்டி,
ஊர்காவற்றுறை. (62549)

மகன், சகோதர சகோதரிகள்,
மைத்துனர்மார், மைத்துனிமார்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும் சபிண்டீகரண அழைப்பும்



திருமதி

### தங்கம்மா அம்பிகைபாகன்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 30-11-1927 | 10-06-2007 |

அன்புடனும் பாசத்துடனும் எம்மை
வளர்த்த தங்கமான அம்மாவே!
எம்மை விட்டு எங்கு சென்றீர்கள்
தாங்காது துடிக்கின்றோம் உங்கள் பிரிவால்.

கடந்த 10-06-2007இல் சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவியின் மரணச்செய்தி கேட்டு உடன் வந்து பலவழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் தந்தி, தொலைபேசி, மின் அஞ்சல் மூலம் தமது அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் மலர்வளையம் சாத்தியவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (10-07-2007) செவ்வாய்க்கிழமை எங்கள் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(62453)

கே.கே.எஸ்.வீதி, மல்லாகம். குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கறுப்பு ஜூலையின் நினைவழியா நாட்கள்!

இலங்கைத் தீவில் இரு வெவ்வேறு தனித்தேசியங்கள் உள்ளன என்பதைத் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் ஜனநாயக வாக்களிப்பு மூலம் வெளிப்படையாக அம்பலப்படுத்தும் முதல் நிகழ்வு 1977 ஜூலையில் நடந்த பொதுத் தேர்தலில்தான் இடம்பெற்றது.

இறையாண்மையுடைய தனித் தமிழ் அரசாகத் திகழ்வதற்கான ஆணையைத் தமிழ்த் தேசத்திடமிருந்து ஒட்டுமொத்தமாகப் பெற்ற அமைப்பாகத் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி ஒருபுறத்திலும் -

ஈழத் தமிழர்களின் தனி இறையாண்மை மற்றும் சுயநிர்ணய உரிமை அபிலாஷைகளை அடியோடு நிராகரித்து, சுதந்திரமாக வாழவிரும்பும் தமிழினத்தை அடிமைப்படுத்தி, தமிழர் தேசம் மீது மேலாண்மை செலுத்துவதற்கான முற்றுமுழுதான அரச அதிகாரம் கொண்ட சிங்களக் கட்சி மறுபுறத்திலுமாக -

பின்னாளில் இலங்கைத் தீவில் இடம்பெறப்போகும் கொடூர துவந்த யுத்தத்துக்குக் கட்டியங்கூறும் களமாக நாடாளுமன்றத்தில் இரு தரப்புகளும் நேரடி மோதலுக்கான சூழலில் எதிரும் புதிருமாக அமரும் சாத்தியம் 1977 பொதுத் தேர்தலில்தான் அரங்கேறியது.

அத்தேர்தல் முடிந்த கையோடு, அத்தேர்தல் பெறுபேறாக இலங்கைத் தீவில் இனமுரண்பாடு கூர்மையடைந்து, தீவிரமுற்று, உச்சம் பெற்றது. அதன் விளைவாக இலங்கைத்தீவு எங்கும் மோசமான இனக்கலவரம் வெடித்தது.

இலங்கைத் தீவில் ஈழத் தமிழர்களுக்கு எதிரான இனக் கலவரங்கள் 1956, 1958, 1961, 1974, 1977, 1981 மற்றும் 1983ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து இடம்பெற்று வந்திருக்கின்றன.

தமிழர் - சிங்களவர்கள் ஆகிய இரண்டு இனங்களுக்கு இடையில் கூர்மையடைந்த இன முரண்பாட்டின் - பகைமையுறவின் - விரோதப் போக்கின் - வெளிப்பாடாகத் தானாகவே கிளர்ந்த வன்முறையாக இந்தக் கலவரங்களைக் கருதிவிட முடியாது. தமிழ் இனத்துக்கு எதிரான இந்த மிகக் கொடூரமான வன்முறை வெறியாட்டங்கள் எல்லாம் பெரும்பாலும் சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களினால் இன அழிப்பு என்ற கபட இலக்கின் அங்கமாக சதித்திட்டம் தீட்டப்பட்டு, ஏவிவிடப்பட்டவையாகும் என்பது உலகறிந்த பரகசியம்.

இந்த வன்முறை வரலாற்றில் 1977 இல் இடம்பெற்ற ஆவணி அமளியும், 1983 இல் இடம்பெற்ற ஆடிக்கலவரமும் மிக மோசமானவை; கொடூரமானவை.

அதிலும் 1983இல் இடம்பெற்ற இன அழிப்பு வெறியாட்டம் முன்னர் நிகழ்த்தப்பட்ட எதனுடனும் ஒப்பிட முடியாத அளவுக்கு மிக மோசமானதாக - குரூரமானதாக - அமைந்தது.

அந்த வன்முறைப் புயல் வீசிய கறுப்பு ஜூலையின் 24 ஆவது ஆண்டுப் பூர்த்தியில் - மற்றொரு ஜூலை மாதத்தில் - இப்போது நாம் நிற்கிறோம்.

தமிழ்த் தேசியத்தின் - தேசத்தின் - ஆன்மாவில் ஆழமான நிரந்தர வடுவை ஏற்படுத்திய மோசமான துன்பியல் நிகழ்வாக அந்தக் கொடூரம் அரங்கேறியது. மீண்டும் என்றுமே சீர்செய்ய முடியாத அளவுக்கு இரு இனங்களிடையேயான உறவை சீர்குலைத்துத் துண்டிக்க இந்த இனவெறியாட்டமே பலமான அத்திவாரமிட்டது.

காருண்ய மகான் புத்தபிரான் பௌத்த சீலம் போதித்த இந்தப் புண்ணிய பூமியில் மனிதத்துவமேயற்ற இத்தகைய கொடுமைகளைக் குரூரமாக சாதித்ததன் மூலம் உலகின் முன் மனிதாபிமானமேயற்ற கொடிய இனமாக சிங்களம் கூனிக்குறுகி நிற்கும் 'கௌரவத்தை' இந்த ஆடிக் கலவர 'சாதனை' அதற்குப் பெற்றுக் கொடுத்தது.

அதேசமயம், மடைவாயை உடைத்தோடும் வெள்ளம் போல உலகெங்கும் வாழும் தமிழர்களிடையே தமிழ்த் தேசிய உணர்வு பீறிட்டுப் பிரவாகம் எடுத்து ஓடச்செய்யும் மகத்தான விளைவை இத்துன்பியல் நிகழ்வு உருவாக்கத் தவறவில்லை.

நாடுகள், கண்டங்கள், பிரதேசங்கள் என்ற எல்லைகளைக் கடந்து தமிழர்கள் அனைவரையும் இன உணர்வின் பால் ஒன்றுபடச் செய்து ஒரு தேசியமாக - தேசமாக - எழுச்சி பெறவைத்த கைங்கரியத்தையும் இந்த ஆடிக்கலவரமே அடிப்படையாக நின்று ஒப்பேற்றியது எனலாம்.

ஆடிக் கலவரக் கொடூரத்தால் கொதித்துப்போன தமிழர்களின் இளம் சமூகம், ஆயுதம் தரித்து விடுதலைப் போரில் ஆயிரக்கணக்கில் அணி திரள்வதற்கான உத்வேகத்தையும், உணர்ச்சியையும், உந்துதலையும் வழங்கி நின்றதும் இதன் விளைவுதான்.

இலங்கை விவகாரத்தில் நமது பிராந்திய வல்லாதிக்க சக்தியான இந்தியா நேரடியாகத் தலையீடு செய்வதற்குத் தேவையான இடைவெளியையும், புறநிலையையும், நியாயப்பாட்டையும், தகுந்த காரணத்தையும் கூட இக்கலவரமே ஏற்படுத்திக் கொடுத்தது.

அதன் வாயிலாக, இந்திய அரசின் மறைமுக உதவிகள் மற்றும் பயிற்சித் திட்டத்துடன் ஆயுதம் தாங்கிய தமிழ்ப் போராளி அமைப்புகள் பல உருவாக்கம் கொண்டு, விரிவாக்கம் கண்டு, விஸ்வரூபம் எடுப்பதற்கான வாய்ப்பையும் அதுவே ஏற்படுத்தித் தந்தது.

ஆக ஒட்டு மொத்தத்தில், தமிழர்களின் உரிமைப் போராட்டம் ஒரு புதிய தளத்துக்குள் பிரவேசித்து, ஆயுதம் தாங்கிய - சுதந்திரம் கோரிப் போராடுகின்ற - விடுதலை வேள்வியாக பரிணாமம் அடைவதற்கான பின்புலப் புறநிலையை இந்த வன்முறைப் புயலாக வீசிய ஆடிக்கலவரமே கொடுத்தது.

அந்தக் கொடூரத்தின் மூலம் தான் விதைத்த வினையின் விளைவை தென்னிலங்கைச் சிங்களம் இன்றும் அறுத்துக் கொண்டிருக்கின்றது; இனியும் அறுக்க வேண்டியிருக்கும்.

தனது தவறுகளுக்குப் பிராயச்சித்தம் செய்யும் வகையில், ஈழத் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளையும், அவர்களின் மனதில் ஆழ உறைந்து கிடக்கும் ஆதங்கங்களையும் உள்வாங்கி, நீதியான தீர்வை அவர்களுக்குத் தருவதற்குத் தென்னிலங்கைச் சிங்களம் முன்வரவேண்டும். இல்லையேல் விதைத்த வினைக்கான அறுவடையைத் தொடர்ந்தும் அது அனுபவிக்க வேண்டியிருக்கும்.

முடிவு சிங்களத்தின் கைகளில்!

# பொருள்களின் விலை உயர்வை ஈடுசெய்ய 25 சதவீத ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கவும்

## ஜனாதிபதியிடம் குடாநாட்டு அரச ஊழியர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை10

குடாநாட்டில் அத்தியாவசிய மற்றும் எரிபொருள்களின் விலை உயர்வை ஈடுசெய்யும் வகையில் சகல அரச ஊழியர்களுக்கும் 25 சதவீத விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கவேண்டும்.

மத்திய, மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கம் மேற்கண்ட கோரிக்கையை அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளது.

ஜனாதிபதி, நிதி அமைச்சர், பொது நிர்வாக அமைச்சர் ஆகியோருக்கு சங்கம் அனுப்பியுள்ள கடிதத்தில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2002ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் அத்தியாவசியப் பாவனைப் பொருள்களின் விலைகள் குறைவடைந்ததோடு, தரைவழிப் போக்குவரத்தும் இலகுவாகவே இருந்தது. இந்நிலைமை தொடருமென நாம் அனைவரும் எண்ணியிருந்த வேளையில், துரதிஷ்டவசமாக கடந்த ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி ஏற்பட்ட யுத்தம் காணரமாக தரைவழிப் போக்குவரத்து தடைப்பட்டதோடு, அத்தியாவசியப் பொருள்களுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டதோடு அவற்றின் விலைகளும் விஷம் போல் அதிகரிக்கலாயிற்று.

குடாநாட்டுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப்பொருள்கள் கப்பல் மூலம் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டபோதிலும் கப்பல் கட்டணம், பொதிசெய் கூலி போன்றவற்றின் காரணமாக அவற்றின் விலைகளும் ஏனைய சகல பொருள்களின் விலைகளும் அதிகரித்த வண்ணமே உள்ளன. இந் நிலை நீடித்துக்கொண்டிருப்பதனால் இந்த மேலதிக விலை அதிகரிப்பினை ஈடுசெய்வதற்காக - 1990 களில் யுத்தப் பிரதேசங்களில் பணியாற்றிய அரச உத்தியோகத்தர்களுக்கு அவர்களது திரட்டிய சம்பளத்தின் 25% தொகையை ஊக்குவிப்புப்படியாக வழங்கியது போன்று, தற்போதைய நிலைமை சீராகும் அல்லது வழமைக்குத் திரும்பும் வரை யாழ். குடாநாட்டில் பணியாற்றும் அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் அவர்களது தற்போதைய மொத்த சம்பளத்தின் 25% இனை ஊக்குவிப்புப்படியாக வழங்கியுதவுமாறு மேதகு ஜனாதிபதி,கௌரவ நிதி அமைச்சர் மற்றும் கௌரவ பொது நிர்வாக அமைச்சர் ஆகியோரைக் கோருகிறது - என்றுள்ளது. (அ-1-111-202)

# பல்கலைக்கழக மாணவர் அனுமதியை 2ஆயிரத்தால் அதிகரிக்க உத்தேசம்

கொழும்பு,ஜூலை10

அடுத்த ஆண்டில் பல்கலைகழகங்களில் பல புதிய பட்டப் படிப்புப் பாடநெறிகளை அறிமுகப்படுத்துவது பற்றி ஆலோசித்துவரும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, மாணவர் உள்வாங்கலை 2,000 பேரால் அதிகரிப்பதற்கும் திட்டமிட்டுவருகின்றது.

இந்த ஆண்டில் 18,000 மாணவர்கள் உள்வாங்கப்பட்ட நிலையில் அடுத்த ஆண்டில் இது 20ஆயிரமாக அதிகரிக்கப்படும் என்று அறியப்படுகிறது.

இதுவிடயமாக ஒவ்வொரு பல்கலைக்கழகத்தின் அதிகாரிகளோடும் தாம் ஆலோசனைகளைத் நடத்திவருவதாக பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

இது விடயத்தில் பேராதனை மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகங்கள் சாதகமான பிரதிபலிப்புகளை வெளிப்படுத்தியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர் உள்வாங்கலை அதிகரிக்கும் செயற்பாட்டை பல்கலைக்கழகங்களின் மாணவர் ஒன்றியமும் வரவேற்றுள்ளது. (ப)

# விபுலானந்த அழகியல் நிறுவன புதிய மாணவர் பதிவு 16ஆம் திகதி வரை நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை10

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் சுவாமி விபுலானந்த அழகியல் கற்கை நிறுவனத்தின் 2006 - 2007 கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தமக்கான பதிவுகளை மேற்கொள்ளும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட உதவிப் பதிவாளர் து. விஜயகுமார் இத்தகவலைத் தெரிவித்தார்.

இசை, நடனம், நாடகமும் அரங்கியலும், கட்புலக்கலை ஆகிய கற்கை நெறிகளுக்கான பதிவுகளே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.,

இதற்கான பதிவுகளை மேற்கொள்ளும் கடைசித்திகதி கடந்த 04ஆம் திகதி என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இப்போது பதிவுகளை மேற்கொள்வதற்கான இறுதி நாள் இம்மாதம் 16ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வெளிமாவட்ட மாணவர்களுக்கான பதிவுகளை மேற்கொள்வது தொடர்பான கடிதம், விண்ணப்பப்படிவங்கள் தாமதமாக சென்றடைந்தமையால் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

விண்ணப்பப்படிவம் கிடைக்கப் பெறாத மாணவர்கள் நேரடியாக வருகை தந்து விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பதிவினை மேற்கொள்ள முடியும் என்றும் மேலதிக விவரங்களுக்கு 06522 22663 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகளை மேற்கொண்டு விவரங்களை அறியலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (1-203)

# லண்டனில் தமிழ் இளைஞர் கடலுக்குப் பலி

லண்டன்,ஜூலை10

வேல்ஸ் மற்றும் வாஷிங்ரன் பகுதிக்கு யாத்திரை சென்ற ஒரு தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்த இளம் மாணவன் ஒருவன் கடல் அலைகளால் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தான்.

வேல்ஸ் பகுதிக்கு அருகில் உள்ள கால்வாய் ஒன்றில் அவனும் அவனுடைய 11 வயது நண்பனும் நீந்தி விளையாடிக்கொண்டிருந்துள்ளனர். திடீரென அலைகளுக்குள் சிக்கிவிட்ட அவர்களைக் கண்ட சிலர் பெரும்பாடுபட்டு சிறிய பையனைக் காப்பாற்றிவிட்டனர்.

பெரியவனை அலை அடித்துச் சென்றுவிட்டது. அவனைக் காப்பாற்ற காவல் துறையினரும் கரையோரப் படையினரும் பெரு முயற்சி எடுத்தனர். கடைசியில் ஒருமைல் தூரத்தில் அவன் கண்டுபிடித்து மீட்கப்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டான். ஆனால் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. (ப)

# மட்டுவில் இளைஞர் கனடாவில் கொலை!

கைதடி,ஜூலை10

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கனடாவில் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த மகாலிங்கம் அஷி (வயது-26) என்னும் இளைஞரே இவ்வாறு கடந்த 7ஆம் திகதி கொலை செய்யப்பட்டவராவார்.

தனது பெற்றோருடன் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக கனடாவில் வசித்துவரும் இந்த இளைஞர் தனிப்பட்ட பகைமை காரணமாகவே கொலை செய்யப்பட்டிருக்கின்றார் என்று தெரிய வந்துள்ளது. விசாரணைகளை மேற்கொண்ட கனடா பொலிஸார் சடலத்தை பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளனர். (1-75)

# மட்டுவில் தெற்கில் இளைஞர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,ஜூலை10

மட்டுவில் தெற்கில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் நேற்றுமுன்தினம் மாலை சுட்டுக்கொல்லப்பட்டார்.

மறவன்புலோவைச் சேர்ந்த குமாரகுலசிங்கம் சிவனேசன்(வயது 21) என்ற இளைஞரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

நீதிவான் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை நடத்தி சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலை சவச்சாலைக்கு கொண்டு செல்லுமாறு பொலீஸாரைப் பணித் தார்.

மறவன்புலோவைச் சேர்ந்த இவர் இடம்பெயர்ந்து மட்டுவில் தெற்கில் வசித்துவந்ததாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (அ-1-207-202)

# தமிழர்கள், முஸ்லிம்களை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரிய வேலைத்திட்டங்களை ஜே.வி.பி. முன்னெடுத்து வருகின்றது.

ஜே.வி.பியை தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு விரோதமான இனவாதக் கட்சியாக பொய்யாக காண்பித்தவர்கள் தடம் தெரியாமல் மறையும் காலம் வந்துவிட்டது. உண்மையாக சமாதான விரும்பிகள் - இனவாதமற்றவர்கள் - மூவின மக்களையும் ஒரே நாட்டவர்களாகக் கருதும் மனப்பாங்கு கொண்டவர்கள் - ஜே.வி.பி.யினரே என்று இந்நாட்டு மக்கள் புரிந்துகொள்ளும் நேரம் வந்துவிட்டது.

இந்த நாட்டை நல்லமுறையில் ஆட்சி செய்வார்கள் என்று நினைத்துத்தான் இந்த அரசை நாம் உருவாக்கினோம். ஆனால், அரசின் செயற்பாடுகள் அனைத்தும் இந்நாட்டு மூவின மக்களுக்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் விரோதமானவையாக அமைந்துள்ளன.

யுத்தம் ஒன்றைக் காரணங்காட்டி, அதனால் பயங்காரவாதத்தில் ஈடுபடுவதாகக் கூறி, விலைவாசியை அதிகரித்து, மக்களைப் படுகுழியில் தள்ளிவிட்டு, பாரிய ஊழலில் ஈடுபட்டு வருகிறது இந்த அரசு.

மூவின மக்களும் நிம்மதியாக - ஒற்றுமையாக - வாழும்வகையில் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க புலிகளுக்கெதிரான யுத்தம் ஒன்று தேவை என்பதை நாம் வலியுறுத்தியே வருகின்றோம்.

ஆனால், இந்த யுத்தம் மூலம் மக்களைக் கஷ்டத்தில் தள்ளிவிடுமாறு நாம் அரசைக் கேட்கவில்லை.

அரசு சரியான முறையில் இந்த யுத்தத்தை முன்னெடுத்தால் மக்கள் நிச்சயம் பாதிக்கப்படமாட்டார்கள். ஆனால், யுத்தம் ஒன்றைக் காரணங்காட்டி அரசு எல்லாவிதமான ஊழல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருவதை எம்மால் ஏற்கமுடியாது.

பல துன்பங்களை அனுபவித்து 1994 இல் எம்மால் அரசியலில் தலைகாட்ட முடிந்தது. ஆனால், அப்போது புலிகளின் பயங்கரவாதத்தை எதிர்க்க வேண்டி ஏற்பட்டது.

அந்த எதிர்ப்பு நடவடிக்கை தமிழ் மக்களுக்கெதிரான ஜே.வி.பியின் இனவாதச் செயற்பாடாகக் காண்பிக்கப்பட்டது.

மூவின மக்களையும் ஒன்றிணைத்து - இந்த இரு பிரதான கட்சிகளும் அங்கம் வகிக்காத - புது ஆட்சியை நாம் உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம். உண்மையான இனவாதிகள் ஜே.வி.பி.யினரா அல்லது ஐ.தே.கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஆகிய கட்சிகளைச் சேர்ந்தவர்களா என்பதை தமிழ் - முஸ்லிம் மக்கள் இனிமேல்தான் விளங்கிக்கொள்ளப் போகிறார்கள்.

இந்த நடவடிக்கையில் அனைத்து மக்களையும் ஒன்றிணையுமாறு நாம் அழைப்பு விடுக்கின்றோம். உண்மையான இனவாதிகளின் முத்திரைகளைக் கிழித்தெறியப்போகின்றோம் - என கூறினார் அவர். (சி)

## நாளை

| | |
|---|---|
| ஆனி - 27 | புதன்கிழமை 11.07.2007 |
| திதி : துவாதசி | முன்னிரவு 11.16 |
| நட்சத்திரம் : | கார்த்திகை |
| | [illegible] 03.19 |
| [illegible] | : 04.29 - 05.59 |
| ராகுகாலம் | : 11.59 - 01.29 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாணந்துறை அம்பிலாவத்தையில் களேபரம் மூவர் வெட்டிக்கொலை; 30 வீடுகள் சேதம்!

கொழும்பு, ஜூலை 10

பாணந்துறைப் பிரதேசத்திலுள்ள அம்பிலாவத்த முஸ்லிம் கிராமத்தில் இன்று அதிகாலை ஏற்பட்ட சம்பவம் ஒன்றில் மூவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டதுடன் 30 வீடுகளும் சேதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இக் கிராமத்தில் கொள்ளையடிப்பதற்கென வந்த பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்த கோஷ்டி ஒன்றைக் கிராம மக்கள் பிடிக்க முனைந்தபோது கிராம மக்களுக்கும் கொள்ளைக் கோஷ்டியினருக்கும் இடையில் ஏற்பட்ட கை கலப்பில் கொள்ளையரின் வாள் வெட்டுக்கு இலக்காகி கிராம மக்கள் மூவர் பலியாகியுள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இச் சம்பவத்தின்போது அங்குள்ள வீடுகளுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. சில வீடுகள் அடித்து நொறுக்கப்பட்டதுடன், சில வீடுகள் தீ வைப்புக்கும் இலக்காகி உள்ளன. இதன்மூலம் 30 வீடுகள் வரையில் சேதமாகியுள்ளன. பொது மக்களின் உடைமைகளும் இச்சம்பவத்தின் போது சேதமாக்கப்பட்டுள்ளன என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து இக்கிராமத்தில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் அங்குள்ள பள்ளிவாசலில் தஞ்சம் புகுந்துள்ளதுடன், பாதுகாப்புக் கருதி அங்கிருந்து வெளியேறி வருகின்றனர் எனவும் -

இது குறித்து பாணந்துறைப் பொலிஸார் மேலதிக நடவடிக்கைகளுக்காக அங்கு செல்கின்றனர் எனவும்- தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து மேலதிக தகவல்கள் இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.

## லண்டனில் ஈழத்தமிழர் பேரணி எதிர்வரும் சனியன்று நடைபெறும்

இலங்கையில் தமிழ் மக்கள் மீதான அரசின் மனித உரிமை மீறல்களைக் கண்டிக்கும் மக்கள் பேரணி ஒன்று எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை லண்டனில் நடைபெறவுள்ளது.

பிரித்தானிய நகராட்சிமன்றக் குழு, அதன் உறுப்பினர்கள் மற்றும் தமிழ் அமைப்புகளின் ஏற்பாட்டில் இந்தப் பேரணி நடத்தப்படவுள்ளது. சனிக்கிழமை முற்பகல் 11 மணி முதல் பிற் பகல் 2.30 மணிவரை ரபல்கார் சதுக்கத் தில் (Trafalgar Square) இந்தப் பேரணி நடத் தப்படும்.

இது தொடர்பாக விடுக்கப்பட்ட ஒரு பிரசுரத்தில் பின்வருமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது- காலத்தின் தேவை - இது எங்கள் கடமை.

வாய்போசாது இருந்தால் வந்த இடத்திலும் சொந்த இடம்போல மனித உரிமை மீறப்பட்டு நாம் அடக்கப்படுவோம், உலகிலேயே அழிக்கப்படுவோம். எமது தொப்புள் கொடி உறவுகள் மீதான அழிவைத் தடுத்து நிறுத்துவோம். ஒரே அணியிலே நின்று ஒரே குரலிலே உலகிற்கு எடுத்துரைப்போம்!

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## திஸமஹாராமவில் வெடி ஓசையால் பெரும் பரபரப்பு!

திஸமஹராம, பெறலியகல பகுதியில் கேட்ட பாரிய வெடி ஓசையினால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்று அதிகாலை 12.35 மணியளவில் இந்தப் பாரிய வெடிச்சத்தத்தை தாங்கள் கேட்டனர்என்று அப்பகுதி மக்கள்பொலிஸ் அவசரப் பிரிவுக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்தனர். (சி)

## கொழும்பில் 24 மணிநேரம் தேடுதல்

கொழும்பு,ஜூலை 10

தலைநகர் கொழும்பிலும் அதனையண்டிய புறநகர் பகுதிகளிலும் படையினரும் பொலிஸாரும் இணைந்து மிகப் பெரும் தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண் டனர்.

நேற்றுமுன்தினம் இரவு 11 மணி முதல் நேற்று மாலை வரை இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது பாதுகாப்புப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்ட சந்தேக நபர்கள் தங்களை உறுதிப் படுத்துவதற்கான ஆவணங்களை பொலிஸாரிடம் சமர்ப்பித்த பின்னர் உடனேயே விடுவிக்கப்பட்டனர்என்று பொலிஸ் பேச்சாளர் ஜயந்த விக்ரம தெரிவித்தார்.

கொழும்பு, புறக்கோட்டை, கோட்டை, மருதானை, மாளிகாவத்தை, பேலியகொட, கொம்பனி வீதி, வாழைத்தோட்டம் ஆகிய பகுதிகளிலேயே இத்தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. (சி)

## நூறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பட்டியலில் உள்ளவர்களில் நூறு பேருக்கு இன்று இணைப்பு வழங்கப்படும். தொடர்ந்து பட்டியல்கள் கிடைக்கக்கிடைக்க நாளாந்தம் நூறு இணைப் புக்களை வழங்கத் திட்டமிட்டுள்ளோம்.

மாத இறுதிக்குள் 3 ஆயிரம் இணைப்புக்களை வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளோம் - என்றார் பிரதிப் பொது முகாமையாளர் வி. யோகேந்திரன். (அ-1)

## தொலைபேசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மேன்முறையீட்டு மனு உயர்நீதி மன்றத்தில் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, ராஜா பெர்னாண்டோ, நிமால் காமினி அமரதுங்க ஆகியோர் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது, பாவனையாளருக்கு அதிகரித்த கட்டணத்தை மீளச் செலுத்துவதற்குப் பதிலாக புதிய கட்டணக் குறைப்பை வழங்குவது தொடர்பான திட்டம் ஒன்றை இந்த வழக்கின் ஒரு தரப்பான தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணையம் முன்வைத்தது.

அதன்படி -

★ வீடுகளுக்கான தொலைபேசிகளுக்குரிய மாதாந்த - நிலையான - கட்டணம் 495 ரூபாவிலிருந்து 350 ரூபாவாகக் குறையும்.

★ வர்த்தகப் பாவனைக்கான தொலைபேசிகளுக்குரிய மாதாந்த - நிலையான - கட்டணம் 1,200 ரூபாவிலிருந்து 950 ரூபாவாக மாற்றப்படும்.

★ தொலைபேசிப் பாவனைக் கட்டணங்களும் சராசரியாக 8.72 வீதத்தால் குறைக்கப்படும். இதன் பிரகாரம் 100 முதல் 199 யுனிட்டுகளுக்கான கட்டணம் 17.99 வீதத்தால் குறையும். 200 முதல் 299 யுனிட்டுகளுக்கான கட்டணம் மட்டும் 0.09 வீதத்தால் கூடும். 300 முதல் 399 யுனிட்டுகளுக்கு 2.14 வீதத்தாலும் 400 முதல் 499 யுனிட்டுகளுக்கு 4.03 வீதத்தாலும் கட்டணம் குறையும்.

★ அதேசமயம், நிமிடங்களின் அடிப்படையில் யுனிட்டுகளை வகுக்காமல் செக்கன் அடிப்படையில் அவை இனி கணக்கிடப்படும்.

★ இதேவேளை 'இன்டர் நெற்' மற்றும் தொலைத் தொடர்பு மையங்களுக்கான கட்டணங்களும் குறைக்கப்படும்.

★ கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரக் கூடியதாக இந்தக் கட்டணக் குறைப்புத் திட்டத்தை அமுல் செய்ய வேண்டும்.

- தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணையம் சமர்ப்பித்த இந்த யோசனைத் திட்டத்துக்கு உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி அளித்தது.

இத்திட்டத்துக்கு சம்பந்தப்பட்ட தரப்புகள் அனைத்தும் இணங்குகின்றனவா என்பதை ஆராய்வதற்காக எதிர்வரும் 17 ஆம் திகதி ஒன்றுகூடி முடிவு செய்யுமாறு ரெலிக்கொம், தொலைத் தொடர்பு ஒழுங்கு படுத்தல் ஆணையம் மற்றும் பாவனையாளர் சங்கம் ஆகியவற்றுக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

எதிர்வரும் ஒகஸ்ட் 27ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்த நீதிமன்றம், மேற்படி கட்டணக் குறைப்புத் திட்டம் ஒன்றை விரைவில் பாவனையாளர்களுக்கு அளிப்பதற்கு அவசரமாகச் செயற்படும்படியும் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்குப் பணித்தது. (சி)

## தொப்பிகலவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்பாட்டுக்குள் வந்து விடலாம் எனக் கூறிய அவர், தமது பெயரை வெளியிடவில்லை. ஊடகங்களுக்குத் தகவல் தெரிவிப்பதற்கான அதிகாரம் அவருக்கு அளிக்கப்பட வில்லை.

இலங்கையின் கிழக்கிலிருந்து, தீவிரவாதிகளை பெருமளவில் அரச படைகள் வெளியேற்றிவிட்டன. இப்பொழுது தீவிரவாதிகளின் கிழக்கு அரணான தொப்பிகலவைக் கைப்பற்றும் பகீரதப் பிரதயத்தனத்தில் படைகள் ஈடுபட்டுள்ளன. இதன் ஒரு பகுதியிலுள்ள பீடத்துக்கே 'தோரா போரா' என பெயரிடப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் உள்ள தீவிரவாதிகளின் கோட்டை என வர்ணிக்கப்படும் மலைக்கு 'தோரா போரா' என்பதே பெயராகும். அந்த அடிப்ப டையில் தொப்பிகல கற்பாறைப் பீடத்துக்கும் கொமாண்டோக்களால் இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது - என்று ஏ.பி.செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## பலத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனால் இவர்களின் வேலைப்பழு அதிகரித்துள்ளது.

அதிகரித்துவரும் யுத்தநிறுத்த வன்முறைச் சம்பவங்களையும் கண்காணிப் பாளர்களின் பாதுகாப்பினையும் கருத்திற் கொண்டு கட்டமைப்பு ரீதியான சில மாற் றங்களை செய்ய முடிவு செய்துள்ளோம்.

இந்த கட்டமைப்பு மாற்றங்கள் குறித்து அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தெளிவுபடுத்தியுள்ளோம்-என்றார்அவர். (அ-1)

## பாப்பரசரின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமை மீறல்கள் என்பனவற் றின் மீது பாப்பரசரின் கவனம் திரும்பியுள்ளது எனவும், இரத்தக்களரியை தடுத்து நாட்டில் சமாதானத்தை உருவாக்குவதற்கான அவசியத்தை கொழும்பில் அரசுத் தலைமைக்கும், வன்னியில் விடுதலைப் புலிகளுக்கும் வலியுறுத்தவும் விசேட பிரதி நிதி ஒருவரை இலங்கைக்கு அனுப்ப வத்திக்கான் முடிவு செய்துள்ளது எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (சி)

## சட்டத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றுவதும் இதில் ஒன்றாகும்.

**இனப்பிரச்சினையை தீர்த்திருக்க முடியும்**

பொதுமக்கள் நிவர்த்தி கோரி நீதிமன்றங்களுக்கு வருகிறர்கள். அவர்களுக்கு எப்போதுமே உதவி செய்ய நீதிமன்ற அதிகாரிகள் தயாராக இருக்கவேண்டும் - என் றார்.

இன்றைய நாட்டின் நிலைமை பற்றி பிரதம நீதியரசர் குறிப்பிட்டுப் பேசுகையில் - நமது நாடு இன்று நம் எல்லோரின தும் தவறுகளால் அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. நாம் புத்தி சாதுரியமாக செயற்பட்டிருந்தால் இனப் பிரச்சினை தீர்ந்துபோயிருக்கும் - என்று குறிப்பிட்டார். (ப)

## பௌத்தபீட..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அஸ்கிரியபீடம், அமரபுரநிக்காய, ராமான்ய நிக்காயா ஆகிய பிரதான பௌத்த பீடங்களின் பிரதிநிதிகளும், பௌத்த பிக்குகளின் அமைப்பான மகாபோதி சங்கத்தின் பிரதிநிதிகளும் வன்னி செல்லும் தூதுக்குழுவில் அங்கம் வகிப்பர்என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்களுடன் தெற்கில் உள்ள கிறிஸ்தவ மதத் தலைவர்களும் சேர்ந்து செல்வர் என்று மன்னார் ஆயர்வண. இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

பௌத்த மற்றும் கிறிஸ்தவ மதத் தலைவர்கள் வன்னிக்குச் சென்று பேசுவதற்கான முன்முயற்சிகள் இப்போது தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அறியவந்துள்ளது.

போர்நிறுத்த மீறல்களால் புரிந்துணர்வு ஒப்பந்தம் செயலற்றுப் போகும் நிலைக்கு வந்துள்ளது. இது பெரும்ஆபத்தான நிலைக்கு இட்டுச்செல்லும். அதற்கு முன்னர் மோதல்களைத் தவிர்ப்பதற்கு இரு தரப்புகளையும் இணங்கச் செய்து மக்களைக் காப்பாற்ற வேண்டும் - என்ற நோக்கத்தை முன்நிறுத்தியே மதகுருமார் வன்னிக்கு விஜயம் செய்யத் திட்டமிட்டு, அதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாகவும் மன்னார் ஆயர் மேலும் தெரிவித்தார். (அ)


**G.C.E. O/L**
வணிகக்கல்வியும் கணக்கீடும்
Paper Class
ஆரம்பம் 11.07.2007
புதன் 4 p.m.
N. சங்கர் B.Com, H.N.D.A.
ENDEAVOUR
தேவி அச்சக ஒழுங்கை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 4591379.


## மரண அறிவித்தல்



### ஆழ்வாப்பிள்ளை சண்முகம் (சண்)

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் - யா/ கல்வித் திணைக்களம்)

துன்னாலையைப் பிறப்பிடமாகவும், 33, கைலாச பிள்ளையார் கோயில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வாப்பிள்ளை சண்முகம் நேற்று (09.07.2007) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வாப்பிள்ளை - வல்லாத்தை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - நேசம்மா தம்பதியரின் மருமகனும் பகவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பொன்னையா, குண சிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும் சுதாஞ்சனா, நந்தசுதன் (லண்டன்), நந்தரூபன் (டென்மார்க்), நந்ததேவன், காலஞ்சென்ற நந்தகுணாளன், நிரஞ்சனா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இந்திராணி, இராசதுரை (இந்திரன், ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் சிவகுமார், ஆனந்தி, சிவநானவதனா, கௌசல்யா, தேவராசா ஆகியோரின் மாமனும் சகனா, கேசாயினி, கபிலன், ஜஸ்மினா, நருஷா, சருசன், நருசன், சானுஜன், விபுசிகா, சஞ்ஜீவன், அர்ச்சுன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் நல்லூர், கைலாசபிள்ளையார் கோயில் வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. நந்ததேவன் (மகன்),
தொ.பே. 0775188712/ 0777110222.

33, கைலாசபிள்ளையார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.


**கணக்கீடு மாதிரிப் பரீட்சை**
**Model Paper Exam**
கொழும்பின் முன்னணி பாடசாலைகளினதும் முன்னணி ஆசிரியர்களினதும் 2007 A/L பரீட்சை நோக்கிய தொடர் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு S. தவா
இடம்: ஆசிரியர் கல்வி கற்பிக்கும் நிலையங் களில்
காலம்: ஆரம்பம் நாளை
"பதிவுகளை இன்றே மேற்கொள்ளுங்கள்"
பரீட்சை முடிந்தவுடன் அந்த வினாத்தாளிற்கான புள்ளியிடல் திட்டம் ஆலோசனைகளுடன் வழங்கப்படும்.
(62568)

**மாபெரும் கருத்தரங்கு**
**இந்து நாகரிகம்**
**திரு. S. பத்மராஜா**
எதிர்பார்க்கை வினாக்களுடன்.....
12ஆம் திகதிக்கு முன் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
**விக்னா கல்வி நிறுவனம்**
தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
தமிழ் ஆசிரியர் திரு. குழந்தை அவர்களின் கருத்தரங்கு நிகழ்வுகள்...

**யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்**
**20ஆம் ஆண்டு நிறைவு - கண்காட்சி**
**பிரதம விருந்தினர்**
**வலரி ஒபேட்** அவர்கள்
**ICRC யாழ். வதிவிடப்பிரதிநிதி**
காலம் : ஜூலை 10, 11, 12 ஆம் திகதிகளில்
நேரம் : காலை 9.30 - பிற்பகல் 3.00 மணிவரை
இடம் : நிறுவனப் பணிமனை, 05, பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
பிரவேசம் : இலவசம்
மாற்றுவலுவுடையோர் உபயோகிக்கும் செயற்கை அவயவங்கள், சார்புறுப்புகள், சக்கரநாற்காலிகள், முச்சக்கரவண்டிகள் போன்ற நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறுபட்ட உபகரணங்கள் தொடர்பான கண்காட்சிக்கு பயனாளிகள், மாணவர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
**யாழ். ஜெய்ப்பூர் நிறுவன முகாமைத்துவ குழுவினரும், பணியாளர்களும்.**
(62576)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.07.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org